278

13 AUG 1942
MADRAS

உ

ஓம் பரப்பிரம்மணே நம:

வெற்றிவேலுற்றதுணை.

குருபாதமே கதி.

அகப்பொருட் கோவை.

பாங்கியிற் கூட்டம்.

278

இஃது

உடுமலைப்பேட்டைத் தாலூக்கா செல்வப்பன்பாளையம்

மகா-௱-௱-ஸ்ரீ குமாரசாமிக்கவுண்டர் அவர்கள்

குமாரர்

ஸ்ரீமான் சண்முகவேல் கவுண்டர்

அவர்கள் மீது

ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூக்கா சேற்றூர் சமஸ்தான வித்வான்

அ. கணபதிக்கவிராயர் அவர்களால்

இயற்றப்பட்டு

பொள்ளாச்சி சதானந்தா பவர் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1942.

27

OFFICE OF THE REGISTRAR OF
13 AUG 1942
MADRAS

உ
ஓம் பரப்பிரம்மணே நம:
வெற்றிவேலுற்றதுணை:
குருபாதமே கதி.

அகப்பொருட் கோவை.

பாங்கியிற் கூட்டம்.

1890

இஃது

894.8111

உடுமலைப்பேட்டைத்தாலூக்கா செல்வப்பன்பாளையம்
மகா-௱-௱-ஸ்ரீ குமாரசாமிக்கவுண்டர் அவர்கள்
குமாரர்

ஸ்ரீமான் சண்முகவேல் கவுண்டர்

அவர்கள் மீது

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்கா சேற்றூர் சமஸ்தான வித்வான்
அ. கணபதிக்கவிராயர் அவர்களால்
இயற்றப்பெற்றது.

உ

தெய்வமே துணை.

உடுமலைத் தமிழ் வித்வான்-கர்ணாம்ருதம் கந்தாஸ்ரமம்-சோதிடசாலை

வெ. ரா. கந்தசாமி பிள்ளை அவர்கள் எழுதிய முகவுரை.

பேரறிவுடைப் பெருந்தகையீர்!

உலகின்கண் மக்களாய்ப் பிறப்பதரிது. அதினும் ஆறறிவுடைய மக்களாய்ப் பிறப்பதரிது. பிறக்கினும், நாஸ்திக வழியின்றி, ஆஸ்திகவழிநின்று, தெய்வம், புண்ணியம், வினையின் பயன், உண்டென்னும் உணர்வுடன் ஞானநூல்களை, ஓதல், கேட்டல், அரிதாகும் இவை அனைத்தையும் பெற்றாராயினும் உயிர்களிடத்தும் கடவுளிடத்தும் அன்புடையாரதல் அரிதாகும். இத்தகைய நிலையில் ஒருவன் அடைவது கடவுளின் திருவடிப் பேறாகும். அத்தகைய திருவடிப் பேற்றை அடையவேண்டியே, எல்லா நூல்களும் சொல்கின்றன. பெரியோர்களும் உபதேசிக்கின்றார்கள். அத்தகைய நிலைக்கு ஒருவன் வரவேண்டுமென்றால், கல்வியினாலும் கேள்வியினாலும் ஆவதொன்றாகும்.

"கற்றிலனாயினும் கேட்க அஃதொருவற்
கொற்கத்தினூற்றும் துணை"

என்ற வேதவாக்கின்படி, கேள்வியினாலேயே மனிதன் ஞானாதிகாரி ஆகிறான். அத்தகைய கேள்வியும் முறையே நூல் உணர்ந்த மூதறிவாளரிடத்தே கேட்கவேண்டும். அத்தகைய பெரியோர் கிடைத்தல் அரியதொன்றாகும். அரியநூல் பல கற்று அவ்வழிச்செவ்விய அறிவினராய் தம்மாட்டு அடைந்தவர்க்குப்புண்ணியமும், புருஷார்த்தமும் தரவல்ல நல்லுபதேசம் செய்யும் பெரியோர் ஒருசிலரேயாவர். அப்படியுள்ள பெரியார்களில் தலைசிறந்த தண்ணளியும், கலைநிறைந்த கண்ணியமும் உடையவர், சேற்றூர் சமஸ்தான வித்வான் உயர் திருவாளர் **அ. கணபதிக் கவிராயர்** அவர்கள் ஆவர். அத்தகைய புலவரால், நன்கு பாராட்டிச் சுவைபெறப்பாடிய பாக்களால், புகழப்பெற்றோரே உண்மைப்புகழ் பெற்றோர் ஆவர் என்பது பெரியார்கண்ட துணிபாகும்.

அத்தகைய பெரியார் நமது தமிழ் நாட்டில் எல்லா நலங்களும் நிறைந்து, பலவளங்களும் சிறந்து, செல்வம் பொருந்த நிலைபெறுவதால் செல்வப்பன்பாளையமென்று புகழப்பெற்ற நகரில் வேளாள குலத்துதித்து நற்கீர்த்தி வாய்ந்து, பெருஞ்செல்வராய் வாழ்க்கைத்துணைபூண்டு நல்லறம் நடாத்தி வந்த

ஸ்ரீமான் குமாரசாமிக்கவுண்டர் அவர்கள் திருக்குமாரர் சண்முகவேல் கவுண்டர் அவர்கள்மீது கோவைப்பிரபந்தத்தின் ஓர்பகுதியாய் (பாங்கியிற் கூட்டம்) என்று சிறப்பியல்புடைய நூல் அகப்பொருட்சுவைபெற, தேனினுமினிய செந்தமிழ்ச் செய்யுட்களால் சொல்நயம், பொருள்நயம் பெற, இனிய, அரிய கற்பனைகளுடன் பாடியது கண்டோர்மனம் கொள்ளை கொள்ளும்படி, அமைந்துகாணும் தோறும் நம்மனம் ஈர்க்கின்றது. இத்தகைய நூல்களால் பாராட்டப்பெற்ற புகழே சிறந்த புகழாகும், இத்தகைய புகழ்பெற்றோர்க்கு உண்டான பெரும் புண்ணியத்தை நம்மால் அளவிட்டுச் சொல்லும்தரமன்று.

''புகழ்படவாழ்வாரே வாழ்வார்மற்றல்லார்
இகழ்வாரை நோவதெவன்''

என்ற திருக்குறள் வேதவாக்கின்படி, உலகில் இத்தகைய புகழுற்றோரே அழியாப்புகழும் புண்ணியமும் உற்றோராவர். இத்தகைய பேருதவியை நூல் முகமாகத்தந்த பெரியார்க்கும், அந்நூலைமுழு அன்புடன் தக்க பரிசு தந்து நல்லாசியுடன் ஏற்றுக்கொண்ட ஸ்ரீமான் சண்முகவேல் கவுண்டர் அவர்களுக்கும் இறைவன் சர்வாபீஷ்டங்களையும் தந்து காத்தருள் செய்யுமாறு, எல்லாம் வல்ல இறைவனைத் திரிகரணத்தாலும் வந்திக்கின்றேன். சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் ஆசிரியர்

திரு மு. அருணாசலம் பிள்ளையவர்கள்

பாடிய

சிறப்புப்பாயிரம்.

பூங்கமலத் திருமகளின் புக்ககமென் றோது
செல்வபுரி வாழ்சீலன்
ஓங்கிய வேளாண் மரபுக்கொரு மணியாம்
சண்முகவேல் உயர்வேள்மீது
பாங்கியிற் கூட்டத்திரு முப்பா னென்றன்
விரியைநயம் பயப்பக்கோத்தான்
ஆங்கவனெங் குலமணியா யமர்ந்தணி செய்
கணபதிநா வரசரேறே.

பழனிமலையடிவாரம்

சு. பெரியசாமி பண்டாரம்

அவர்கள் இயற்றிய

சாற்றுக்கவி

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

உண்முகமார் தயைபெருகச் செல்லயன்பா
ளயத்தில்வளர் உதார சீலன்
சண்முகவேல் வள்ளலெனும் சற்குணபூ
டணன்பெருமை தாணிதேறப்
பண்முதிர்சீர்த் தமிழ்க்கவியா லகப்பொருட்
கோ வைப்பனுவல் பாடித்தந்தான்
வெண்முளரித் தவிசினள்கண் ணருள்பெறு
மெங் கணபதிப்பேர் மேலோ னம்மா.

பரமக்குடி ஹைஸ்கூல் தமிழ்பண்டிதர்

வித்வான் பெ. கோவிந்த நாவலர்

அவர்கள் இயற்றிய

சாற்றுக்கவி.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

செல்வநெடுமாடமலி செல்வபுரிச்சண்முகவேல்
      செம்மல்மீது
சொல்வளமும் பொருள்வளமும் துலங்க அகப்
      பொருட்கோவைத் துறைவழாது
நல்லகவி எழுபதின்மேற் பாங்கியிற் கூட்டட்
      துவிரி நவின்றான் தேர்ந்த
கல்வியறிவினிற்சிறந்த கணபதியென்றுல
      கிசைக்கும் கவிஞரேறே.

மெட்ராத்ரி ஜமீன் வித்வான், பண்டிட்

கா. அப்துல்சுக்கூர் அவர்கள் இயற்றிய சாற்றுக்கவி.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

சோற்றூருந் தமிழூரும் கொடையூரும் இதுவலது
சொல்லுமெந்த
வேற்றூரும் நிகராமோ வெனுஞ்செல்வ புரிபுரக்
கு மீளிதென்றற்
காற்றூரும் வேணிகர்க்கும் சண்முகவேல்
வள்ளலெனும் கன்னன்மீது
சேற்றூரும் புகழ்பூமான் மகிழ்கணப திப்பெய
ர்கொள் செம்மலம்மா
கண்குளிரப் பாப்பார்க்கும் செவிகுளிரக்
கேட்பார்க்கும் கரந்தொட்டார்க்கும்
பண்குளிரப் படிப்பார்க்கும் நாக்குளிர
நூலுணர்ந்த பாவல்லோர்க்கும்
உண்குளிர முக்கனியும் சற்கரையும் தீம்பாலு
மூவர்ப்புத்தோன்ற
எண்குளிரத் தமிழ்பாவாற் பாங்கியிற்
கூட்டத்துறை யொன்றிசைத்தான் மன்னே

உடுமலை தமிழ் வித்வான்-கர்ணாம்ருதம்
கந்தாஸ்ரமம் சோதிடசாலை.

வெ. ரா. கந்தசாமிபிள்ளையவர்கள்

இயற்றிய

சாற்றுக்கவி.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

திருவாரும் செல்வபுரிக் குமாரசா
மிக்குரிசில் செவ்வேள் தந்த
மருவாரும் குவளைமலர்த் தொடைமார்பன்
சண்முகவேல் வரதன்றன்மேல்
கருவாரும் பிறவியிடைப்பெறுபயனீ
தெனப் பெரியோர் கண்டுபோற்ற
உருவாரும் அகப்பொருளாம் கோவைபாங்
கியிற் கூட்டத் துரைத்தான் மாதோ
அன்னவன் யாரென வினவிற் சேறை
நக ராசரவைக் கான நல்லோன்
தென்னவன்றன் சபைப்புலவ னிவனெ
ன்னத் தெளிந்தவுளச் சீலர் போற்றும்
நன்னலங்கூர் கணபதிப்பேர்க் கவிஞனெனு
ம் கண்ணியன்சீர் நாவல்லோனும்
எந்நலமும் தன்னலமாக் கொண்டு மனந்
தெளிந்தவுளத் திவன்றா னம்மா.

அகப்பொருட் கோவை.

பாங்கியிற்கூட்டம்.

அகப்பொருள்.

அளவிலின்பத்தைந்திணைமருங்கில்
களவுகற்பெனவிருகைகோள்வழங்கும்.

இயற்கைப் புணர்ச்சி யிடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டமென் – றுணர்த்தியகளவிற் – புணர்ச்சி நால் வகைத்தே.

கைக்கிளை
அதுவே

காமஞ்சான்ற இளமையோள்வயிற் குறிப்பறிகாறும் குறு காதுநின்று குறிப்படுநெஞ்சொடு கூறலாகும்.

பாங்கியிற் கூட்டம் இரந்துபின்னிற்றல், சேட்படை மடற்கூற்று, மடல்விலக் குடன்படல் – மடற்கூற் றொழிதல், குறைநயப்பித்தல், நயத்தல், கூட்டல், கூடல், ஆயங்கூட்ட லென் றீராறுவகைத்தே இகுளையிற்கூட்டம்.

இரந்து பின்னிற்றலும் சேட்படையும்–தலைவனுட்கோள் சாற்றலும், பாங்கி குலமுறை கிளத்தலும், தலைவன் தலைவி தன்னையுயர்த்தலும், நன்னுதற்பாங்கி–அறியாள்போன்று வினு

தலும், இறையோன்—இறைவிதன்மையியம்பலும், பாங்கி தலை வியருமை சாற்றலும், தலைவன்—இன்றியமையாமை யியம்பலும் பாங்கி நின்குறை நீயேசென்றுரை யென்றலும்—பாங்கியைத் தலைவன் பழித்தலும், பாங்கி—பேதமையூட்டலும், காதலன் தலைவி — மூதறிவுடைமை மொழிதலும் — பாங்கி முன்னுற புணர்ச்சி முறையுறக் கூறலும்—தன்னிலை தலைவன் சாற்றலும் பாங்கி—உலகியலுரைத்தலும், தலைமகன் மறுத்தலும் பாங்கியஞ் சியச்சுறுத்தலும் ஆங்கவன்—கையுறை புகழ்தலும் தையல் மறுத் தலும்—ஆற்றாநெஞ்சினோடவன் புலத்தலுமவள்—ஆற்றுவித்தகற் றலுமாகு நாலைந்தும் இரந்துபின்னிற்றற்கும் சேட்படுத்தற்கும் பொருந்துபவென்மனார் தெரிந்திசினோரே.

தலைவன் கூற்றாயினவெல்லாம் இரந்துபின்னிற்றற்கும் பாங்கி கூற்றாயினவெல்லாம் சேட்படுத்தற்கு உரியன

விநாயகர் வணக்கம்

அறுசீராசிரிய விருத்தம்.

திருவிளங்கும் பதுமினிப்பெண் ணெரு
த்திசில சிலதியர்தற்
சேரத் தோன்றும்.
தருவிளங்கும் கரதலத்தான்
சண்முகவேல் வரதன்வரைச்
சார்பின் வேள்போல்.
உருவிளங்கும் தலைவனுற்ற
வேட்கையொடு புரிகளவினு
றுபி ஞென்றைக்
கருவிளங்கும் மழைமதக்கைக்
களிற்றிறையைப் பணிந்துறைப்பன்
கனிந்து தானே.

அகப்பொருட் கோவை

பாங்கியிற் கூட்டம்.

நூல்.

துறை.

தலைவன் உட்கோள் சாற்றல் - என்பது தலைவன் தன் உள்ளக் கருத்தினைக் கூறுதல்.

கட்டளைக் கலித்துறை.

(1) பார்கொண்ட செங்நெல் வயல்சூழும்
செல்வப் பதிவளரும் -
தார்கொண்ட திண்புயன் சண்முக
வேலெனும் சாமிவெற்பீர்.
ஏர்கொண்ட பாற்கடற் றோன்று
மமுதும் இருநிதியும் -
கார்கொண்ட மாடமும் காட்ட
வல்லேனெனைக் காமின்களே.

பாங்கி குலமுறை கிளத்தல் - தலைவனுக்கு தலைவியின் குலமுறை கூறி, நின் கருத்துஇயையாதென்றல்.

(2) கற்றூர் புகழ்தரும் சண்முகவேலெங்கள்
கன்னன்வெற்பில் -
உற்று ரிருங்குன்ற வாணர்கள்
யாமென் றுணர்ந்திலைநீ
நற்றூர் புனைந்தசெவ் வந்தியினூடு
நவிலெருக்கை
மற்றூர் புனைய நினைவார்சொல்
வேலவ வையகத்தே.

தலைவன் தலைவிதன்னை உயர்த்திக் கூறுதல்.

(3) வருக்கையு மாவும் புடைசூழும் செல்வ
வளநகரான்
பெருக்கையுற் றோங்கிய சண்முக வே
ல்மெய்க்கு போன்வெற்பில்
முருக்கையும் கோவைக் கனியையும்
போலிதழ் மொய்குழலாய்
எருக்கையு மீசன் முடிமே லணிந்த
தெவன்சொல்வையே.

(பாங்கி அறியாள்போன்று வினுதல்) தோழியர் பலருளர் அவருள் நின்னை வேட்கையுறுவித்தவள் யாரென்று தோழி அவளை அறியாள்போன்று தலைவனை வினுதல்.

(4) சேய்முத்தங் கொண்ட பவளச்செவ்
வாயுமை சேகராம்
வேய்முத்தர் தாள்பணி சண்முகவேலெ
னும் வேந்தன்வெற்பீர்
ஆய்முத்தங் குற்றல் சுனையாடல்
பூக்கொய்தலாதியவாம்
வாய்முத்த வாணகை யார்க்குளங்
கார் நும்மனத்தவரே.

இறையோன் இறைவிதன்மை இயம்பல் - தலைவன் தோழிக்குத் தலைமகளுடைய இலக்கணம் கூறுதல்.

(5) வேலோன் கரிச்சிக் குமாரனருளை
விரும்புமனு
நூலோன் மிகுபுகழ்ச் சண்முகவேல்
வரை நுண்ணிடையாய்
மாலோனடுத்ததும் மான்மேல்படுத்ததும்
வன்கணையாச்
சேலோனெடுத்ததும் மின்னுட்
கிரண்டு செழுங்கண்களே.

(6) செய்யார்ந்த மென்மலர்த் தேனுல்விளை
தரும் செல்வபுரி
மெய்யார்ந்த வாசகன் சண்முகவேல்
மதவேள் பொருப்பாய்
நெய்யார்ந்த கூந்தல் இழையார்ந்த
சிற்றிடை நீலவளைக்
கையார்ந்த காந்தள் வரையார்ந்த
கொங்கை யக்காரிகைக்கே.

(பாங்கி தலைவி அருமை சாற்றல்) என்தலைவி நும்மால் விரும்பற்கெளியள் அல்லளென்று தோழி தலைமகற்குரைத்தல்.

(7) திருமானிரதியனையாள் சிற்றூரைத்
தினம் புரக்கும்
பெருமான்புதல்வி யெளியளன்றேபொ
ன்பிறங்குமணி
மருமான் செல்வத்துரை சண்முகவேல்
மதிமான்வரைமேல்
ஒருமான் சிலையண்ணலே கலையாவு
முணர்ந்தவளே.

(தலைவன் இன்றியமையாமையியம்பல்) தலைவியையின்றி தன்னுயிர் நிலையாதென்று தலைவன் தோழிக்குரைத்தல்.

(8) தன்னுயிர்போல்வெண் குடைநிழல்நாட்டித்
தழைத்தபல
மன்னுயிர் காத்தருள் சண்முகவேலெ
னும் வள்ளல்வெற்பாய்
நின்னுயிராகும் செந்தேன் மயல்நோ
ய்க்கு நிகழ்மருந்தாய்
என்னுயி ராகிநின்ரு ளினிவேறிங்
கெவன் சொல்வனே.

(பாங்கி நின்குறை நீயேசென்றுரையென்றல்) தலைவியிடத்து நீயேசென்று நின்குறை கூறென்று தலைவனுக்குத் தோழி சொல்லல்.

(9) மெய்யன்குமாரப் பெரியாவுடைச்செந்தில்
வேலுயர்ந்த
துய்யன்மகிழ் தந்தைசண்முகவே
லெனுந் தோன்றல்கொடைக்
கையன்வெற்பா மதுவுண் வண்டுக்கார்
மலர் காட்டுவர் நீ
தையன்மடக்கொடிக் கன்பொடுநேர்
சென்று சாற்றுதியே.

(10) என்குறை தீரென் றிறைஞ்சுந்
துரோபத னின்புதல்வி
தன்குறை தீர்த்தருள் சண்முகவே
லெங்கள் சாமிவெற்பில்
உன்குறை தீர்த்த லெனக்கரி
துள்ளத் துறுதிகொண்டு
நின்குறை நீசென் றியம்புதி
யாலந்த நேரிழைக்கே.

(பாங்கியைத் தலைவன் பழித்தல்) தோழி மறுத்ததற்காக தலைவன் அவளைப்பழித்துரைத்தல்.

(11) போதமை வண்டிசை பாடும்தென்
செல்வ புரிவளரும்
தாதமை மாலையன் சண்முகவேல்
சுந்தரன் கிரியாய்
சூதமை கொங்கையர் பேதயரென்ப
துநிசமல
பேதமை காமியர்க் கேநின்
றிருவருள் பேசரிதே.

(பாஙகி பேதமையூட்டல்) பாங்கி தலைவிமாட்டு அறியாமை ஏற்றிக்கூறுதல்.

12) சற்றும் சிறுசிற் றிலைமறவாள்வெண்
டாளமிட்டுக்
குற்றும் செயலன்றி மற்றோர் கவலை
குறித்தறியாள்
எற்றிவட் குன்குறை சொல்வதெந்
நூலும் இயல்பலவும்
கற்று மகிழ்சண் முகவேல் வித்தாரன்
கனவெற்பனே.

(13) வீமன் குமாரப் பெரியாவுடைச்
செந்தில் வேலெனச்சொல்
சோமன் புகழ்த்தந்தை சண்முக
வேல்எனும் துங்கன் வெற்பா
காமன் சிலைநுதல் பாவைக்கு
மையிட்டுக் கைபுனைந்து
பூமன் மணற்சொன்றி யூட்டியிட்
டாட்டும் புனைதொட்டிலே.

(சோமன் என்பவன் தினகரச்சக்கரவர்த்தியினது குமாரன் பால்யப்பருவத்தில் வெளிப்புறத்துலவுங்கால், தனது பிதாவின்

சமுகப்புலவர் ஒருவர் எதிர்கண்டு மிக்க மகிழ்ச்சிகொண்டு இருகையையும் விரித்து அழைக்க, அதுகண்ட சோமன் இவர் புலவர், ஏதோ நம்மிடம் கேள்க்கிறார் என்று எண்ணித்தனக் குப் புனையப்பெற்ற ரத்தினச்சுட்டியை அவிழ்த்துக் கொடுக்க' அதுகொண்டு சோமனுடன் புலவர் பிதாவின் சமுகஞ்சென்று —"கையைவிரித்தழைத்தேன் கண்டு குழந்தைச்சோமன் செய்ய சுட்டி ஈந்தான் தினகரா"—எனக்கூறிச் சுட்டியை முன்வைத் தனர் அதுகண்டுமகிழ்ந்த பிதா "பையவே தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என ஆன்றோர் திருவாக்கை எதிர் கூறினன். அவ்வாறு புகழ்பெற்ற வன் சோமன். இப்பிரபந்த கர்த்தா சண்முகவேல்க் கவுண்டர் குமாரன் குமாரப் பெரியாவுடைச்செந்தில்வேல் எனப்பெயர் வாய்ந்த புத்திரசிரோமணி தனது தாயார் கரத்துவைத்திருக்கும் போது நானும் குழந்தையின் பிதாவும் பக்கஞ்சென்ற சமயம் தாயார் கரத்திருந்த இரண்டு ரூபாயை எடுத்து என்கையில் கொடுக்கக்கண்ணுற்ற பிதா மிகவும் மகிழ்ந்தனர். இதுபற்றிச் சோமனை நிகர் கூற நேர்ந்தது.)

(தலைவன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்) தலைவன் முதிர்ந்த அறிவினையுடையவள் தலைவி என்று கூறுதல்.

(14) பேதையென் றுயென் னயர்தீர்த்
தருள்புரி பெண்ணமுதாம்
மேதைப் பெருந்திரு மாதைப் பனி
மொழி மெல்லியலாய்
கீதைக் கிருசெவி தந்தவர்க் குண்மை
சொல் கேசவன்றுள்
போதைப் பணிசண் முகவேலோய்
யாரன் பொருப்பிடத்தே.

(பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக்கூறல்) தோழி தலைவனுக்கு முன்னர்கூடியவாறு இன்னும் சென்று கூடுக என்று சொல்லல்.

(15) தனியே விழைந்த தகவிதுவேலென்
றனை நனி நீ
இனிவேண் டுவதெவன் அவ்வாறு
சார்தி இசைமதுரக்
கனிவா சகன்சண் முகவேல் குமுணன்
கனிகமழும்
பனிதோய் நறும்பொழில் சூழ்சாரற்
பன்றிவெற் பார்சண்பனே.

(தன்னிலே தலைவன் சாற்றல்) தலைவன் தன் வருத்த மிகுதி கூறல்.

(16) வரையோங்கு திண்புயன் சண்முக
வேலுயர் மாரன்வெற்பில்
தரையோங்கு பூம்பொழில் வாழ்தெ
ய்வம் போலெதிர் சார்ந்துநின்ற
உரையோங்கு பாவையன் ஞாளெழி
ற்காந்தமென் னுள்ளக்கல்லை
விரையோங்கு கூந்தநல் லாயீர்க்
கலுற்ற வியப்புநன்றே.

(பாங்கி உலகியலுரைத்தல்) தோழி தலைவனுக்கு தலை மகளை உலகமுறைப்படி வரைந்து கொள்ளென்று கூறல்.

(17) நன்மநூ நூன்முறை நாட்டும்கு
மாரசுவாமி நல்ல
தன்ம துரைதரு சண்முகவேலெனுந்
தாமன்வெற்பில்
வன்மலை போலும் புயத்தா யுலகர்
வகுத்தபடி
மென்மொழி யாளை விரும்புதியேல்
மணம் வேண்டுதியே.

(தலைமகன் மறுத்தல்) தலைவன் தோழி குறைநயந்தபின் வரைந்துகொள்வேனென்றல்.

(18) குணத்தா லுயர்புகழ் சண்முகவேலெனும்
கொண்டல் வெற்பில்
உணத்தான் புனல்விரும் புற்றூர்க்குக்
கேணிவெட் டுத்தமர்போல்
மணத்தா லியைவ தழகெனிற் பின்னர்
வரைவன் மலர்க்
கணத்தால் மிகுகுழலா ளருள்நாட்டு
ம் கருத்தறிந்தே.

(பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்) தோழி தமரையஞ்சி அவ்விடம்விட்டகலுமாறு தலைவனை அச்சுறுத்திக் கூறுதல்.

(19) சூலே படைத்த புயலே நிகர்த்த
குழாயலங்கல்
மாலே நிகர்த்தருள் சண்முக வேலுயர்
வள்ளல் வெற்பா
வேலே பிடித்தெமர் போதுவர் போது
மிகவிருண்ட
தாலே தனித்திவ ணில்லாது சேறி
யகனகர்க்கே.

(தலைமகன் கையுறைபுகழ்தல்) தலைவன் இத்தழை நல்லதென்று கொடுவந்த கையுறையைப்பாராட்டுதல்.

(20) துதிசேர் புகழ்த்துரை சண்முக வேலெனும்
துங்கன்மிகு
மதிநீ தன்பன்றி வரையிடத் தேவளர்
வல்லியன்னீர்
சதுரா சலத்தும் வராகாசலத்தும்
தமிழ் தழைத்த
பொதிகா சலத்தினும் தேடக்கிட்டா
திந்தப் பூந்தழையே.

(பாங்கி கையுறை மறுத்தல்) தோழி தலைவன் கொடுவந்த கையுறையை ஏற்காது மறுத்தல்.

(21) வெற்புக் கிருசிறை யின்றெனக்
கொய்ததெய் வேந்திரனும்
மற்புக்க திண்புயன் சண்முகவேலெ
னும் வள்ளல் வெற்பா
பொற்புக் கமைதரு பூந்தழை யாயினும்
போற்றிலமெங்
கற்புக் கிழுக்கெமர் கண்டா லயிர்ப்பர்
கடுங்கண்ணரே.

(தலைமகன் ஆற்ருது புலத்தல்) தலைவன் தோழி கை யுறை மறுத்தமைக்கு ஆற்ருது புலந்து கூறல்.

(22) வஞ்சக் கொடுங்கண் ணரக்கிமெய்க்
கோசிகர் மாமகத்துத்
துஞ்சச் சரந்தொட்ட சண்முகவேலெனுந்
தோன்றல் வெற்பில்
விஞ்சத் தவஞ்செய்தி லேனிவட்
சேர்ந்தணை மேவவென்போல்
கொஞ்சத் தவம்செய்த தோவாட்டங்
கூறக் கொழுந்தழையே.

(தோழி தலைவனை ஆற்றுவித்தனுப்பல்)

(23) பொன்னே தழைத்தருள் சண்முக
வேலெனும் பூமன்வெற்பா
மின்னே ரிடைச்சியை வேண்டிவரங்
கொள்வன் வேட்டுற்றநீ
இன்னே நகர்சென் றிருட்போ தெலாங்
கழித் தெல்விடிந்த
பின்னே வரினுன்றன் கையுறையென்
கைப் பெறுவனன்றே.

(மடற்கூற்றும் மடல்விலக்கும்) இரந்து குறைபெருது வருந்திய கிழவோன் - மடலே பொருளென மதித்தலும் பாங்கிக் - குலகின்மேல்வைத் துரைத்தலும் அதனைத் - தன்மேல் வைத்துச்சாற்றலும் பாங்கி - தலைமக ளவயவத்தருமை சாற்றலும் - தலைமகன் தன்னைத்தானே புகழ்தலும் - அலர் முலைப் பாங்கியருளியல் கிளத்தலும்-கொண்டு நிலைகூறலும் என்றிவை யேழும் - மடற்கூற்றிற்கும் மடல் விலக்கிற்கும் - கடவவென் மனுர் கற்றறிந்தோரே.

தலைமகன் கூற்ருயினவெல்லாம் மடற்கூற்றிற்கும், பாங்கி கூற்ருயினவெல்லாம் மடல்விலக்கிற்கும் உரியனவாம்.

அவற்றுள் இரந்து குறைபெருது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல்.

(24) அழகும் புகழும் பெறுசண் முகவே
லதிபன் வெற்பில்
பழகுந் திருவனை யார்சிறிதேனுங்
கண் பார்த்திரங்கார்
மழகுஞ் சரந்திரி மாவனத்தே நின்ற
மாதருள்கொண்
டொழுகும் படியிப் பனைமடலூர்வ
னுறுதியிதே.

(மடலேறுதலை உலகின்மேல் வைத்துரைத்தல்)

(25) தொடுசிலைப் பற்குனன் சண்முகவேல்
வாதுங்கன் வெற்பில்
அடர்தனக் குன்றின் மிசையேற்றிப்பூந்தண்
ணருங்கயத்து
மடவியர் வீழ்த்துளத் தைத்தேற்றி
லாரெனில் மற்றிளைஞோர்
சடைமுடித்தேமட லூர்வரென் பாரங்
தனைப் புனைந்தே.

(தலைமகன் மடலேறலைத்தன்மேல் வைத்துரைத்தல்)

(26) மழையே நிகர்செங்கைச் சண்முக
வேலெனும் வாமன்வெற்பில்
உழையே நிகர்விழிக்கும் பிடியேநிகர்
ஒண்ணடைக்கும்
இழையே நிகரிடைக்கும் குழைந்தோ
ல்கும் இதயத்தனன்
குழைதோய் விழிமடவீர் மடலூர்வன்
குவலயத்தே.

(பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றல்) தோழி தலைவியின் அவயவங்களை எழுதலருமை கூறல்.

(27) தருவும் நிகர்கொடைச் சண்முகவே
லெனுந்தாமன் வெற்பா
மருவும் சிலப்பதி காரமும்
நேர்வளையாவதியும்
திருவுந் தியாருந் திருக்கடையாப்பும்
கைதேர்ந்திடினும்
ஒருதிரு வாசக மெவ்வாறெழுத
லுனக்கரிதே.

(28) பெருவள மோங்கிய செல்வப்பெரும்பதி
பேணிவளர்
உருவுயர் மாமதன் சண்முகவேலுய
ரொண்கிரியாய்
திருவாலங் காடும் திருமுல்லை
வாயிலும் தீட்டிடினும்
ஒருதிருக் காஞ்சித் தலம்நீவரைகு
வையோசொல்வையே.

(தலைமகன் தன்னைப்புகழ்தல்) தலைமகன் தன்எழுதல் வன்மையைப் புகழ்தல்.

(29) தங்குங் கடவிடத் தும்பர்க்கைகந்
தாருவும் சார்நிதியும்
பொங்க முதுந்தரும் சண்முகவேல்
வரைப் பொற்றொடியாய்
எங்கு நிறைவஸ்துவையித் துணைத்தென்
றெழுதவல்லேற்
கிங்கொரு மானுருத் தீட்டலரிதென்றல்
ஏழைமையே.

(பாங்கி அருளியல் கிளத்தல்) தோழி அருளுடையார்க்கு மடலேறுதல் தகாதென்று கூறுதல்

(30) முறைமன்னர் மெச்சிய சண்முக
வேல் மெய்முகுந்தன் வெற்பில்
நிறைகுறுங் குஞ்சும் பெடையொடுசே
வலு நின்றிரங்க
உறையும் பனையைக் குறைத்துப் பரி
மடலூர்வ னென்றாய்
குறையிதென் றெண்ணிலை யாண்
மைக்குநேர்ந்த குணமல்லவே.

(31) வள்ளலெ வருமொரு வடிவாகவரு
கொடையான்
தெள்ளிய வாசகன் சண்முகவேலுயர்
தீரன் வெற்பா
உள்ளங் கருக்கையுற் ரேமடவாரின்
புறுவ திது
வெள்ளிய நீறணிவார்க் கிசைவான
விதியல்லவே.

(32) கங்காநதி வளஞ்சூழுஞ் செல்வாபுரிக்
கன்னன் மலர்க்
கொங்கார்ந்த திண்புயன் சண்முகவே
லருட்கொண்டல் வெற்பில்
இங்கே நன்னீலப்பெருமடற் கிள்ளேயி
லேறிடினும்
மங்கா அளிக்குணம் கொள்ளாதநீயும்
மதனல்லவே.

(33) தாயனையான் திருச்செல்வ புரியென்
றுந்தான் புரக்கும்
தூயபெரும் புகழ்ச்சண்முக வேலெனுந்
துங்கன் வெற்பா
நேயமில்லாதவுன் சித்தார்த்தங்
கண்டனனேரிரசம்
நீயிவண் தாளிதந்தான் வேண்ட
வெண்ணுதல் நேர்த்தியன்றே.

(34) திருவள ரும்புயன் சண்முக வேலெனு
ம் சீலனுயர்
மருவளர் மாலையன் வெற்பண்ண
லேகன்னி வாழைக்குமேல்
ஒருபடப் பாம்பைப் பிடித்தாட்டற்
கெண்ணிய உத்திகொண்டோ
பெருமடற் தேளைக்கைக் கொள்வனென்
ருயிது பேதமையே.

(35) பண்ணைக் கதிர்வளர்க் குங்கொங்கு
நாட்டினன் பார்த்தனென
நண்ணிப் புகழ்பெறும் சண்முக
வேல்வா ராசன்வெற்பா
எண்ணிப் புகன்றிலை மாசோதிடப்பல
னேபுகன்றாய்
பெண்ணையிக் கன்னிக் குரித்தென்
றுரைத்ததும் பேதமையே

(36) மேருவை நேர்புயன் சண்முக
வேலெனும் வேள்வளரும்
ஏருரு நாட்டின் இளம்பிடி மாண்பு
ம் எழிலுங்கண்டு
கூறும் வியப்படை அங்குசம்
நாடிய கொற்றவ நீ
நேருறு புன்மடன் மாவூர்ந்திடுதல்
நன்னேர்த்தியன்றே.

(37) பத்திரதன் மெய்க்குமார சுவாமி
விற்பன்னனருள்
புத்திரன் சண்முக வேலெனும்
மால்வரைப் போந்து வந்து
மித்திரனு ளெனவேண்டினை தேளெனவே
மதியாய்
சித்திரரூப அதற்குரியா னெனல்
செவ்விதன்றே.

(கொண்டு நிலைகூறல்) இரந்துபடுமாறு நிற்கும் தலைவனை த்தாங்கிக் கொண்டு நிற்றற்குரிய சொற் கூறுதல்.

(38) கோவிற் கிசைந்த திருவெள்ளியம்பல
க் கூத்தர்தமை
நாவிற் கிசையப் புகழ்சண்முகவேல்
நரேந்திரன் வெற்பில்
பூவிற்கவ் வேடகம் கூடற்கு நன்
றென்று போற்றினும் சீர்
மேவிற் பெரிய கயற்கண்ணி கூரன்
பை வேண்டுதியே.

(39) செல்வம் பெறுதுரை சண்முகவேல்
வா சீலனெனும்
கல்விக் கடலனை யான்வரை மேன்
முடி கைக்கொண்டொரு
நல்லா சாளுதல் தாலங்கொண்
டென்னினும் நன்னிலைமை
சொல்லுநல் லாரிணக் கம்பெற
னன்கு தொடருதியே.

(40) சினக்கும் பகைவ ருடல்பொடி யாகச்
சிதைத்துவரும்
வனக்குஞ் சாத்துரை சண்முக
வேலெங்கள் வள்ளல் வெற்பா
தனக்குடம் வேண்டுவர் புல்வளம்
வேண்டுவர் தாமடுத்தான்
நினைக்கப் பயன்சுரக் கச்செய்வ
தோநன் னிலையண்ணலே.

(குறைநேர்தலும் மடற்கூற்றொழிதலும்) தலைவியிளமைத் தன்மை பாங்கி தலைவற்குணர்த்தலும் தலைவன் தலைவி வருத் தியவண்ணமுரைத்தலும் பாங்கி செவ்வியருமை செப்பலும் தலைவன் செவ்வியெளிமை செப்பலும் பாங்கி என்னை மறைப் பினெளிதென நகுதலும், அந்நகை பொறாஅ தவன் புலம்பலும மவள் தேற்றலும் கையுறையேற்றலுங்கிழவோன் - ஆற்றலு மென்னு மவ்வொன்பானும் - குறைநேர்தற்கும் மடற்கூற் றொழிதற்கும்முறைமையினுரிய முன்னுங்காலே.

பாங்கி கூற்றாயினவெல்லாம் குறைநேர்தற்கும் தலைவன் கூற்றாயினவெல்லாம் மடற்கூற்றொழிதற்கும் உரியனவாம்.

அவற்றுள்

(பாங்கி தலைவி இளமை உரைத்தல்)

(41) தாக்குஞ் செருக்களத் தொன்னாரை
வென்று தமரையெல்லாம்
காக்கும் தயைகொண்ட சண்முக
வேலெனும் கன்னன் வெற்பா
பாக்கும் அரும்பும் நிகர்கொங்கைக்
கின்பப் பசுங்குதலை
வாக்குந் திருந்தில பேதையென்
றோர்ந்திலை மாண்பிதன்றே

(தலைவன் தலைவி வருத்தியவண்ணமுறைத்தல்)

(42) வேட்கும் புயற்கும்நிகர் வண்மையான்புவி
வேந்தற்கெந்த
நாட்கும் துணைச்செயும் சண்முகவே
ல் வராசன்வெற்பில்
வாட்கும் கணைக்கும் நிகர்விழி யாலெ
ளை வல்விடங்கூர்
தேட்குஞ் செனத்திரு மாதுசெய்
நீர்மையைச் செப்பரிதே.

(பாங்கி செவ்வியருமை செப்பல்)

(43) காணுந் தொறுங் கவிவாணர்க்கனமு
ந்தனமுந்தந்து
பேணும் புகழ்கொண்ட சண்முகவேல்
வரைப் பேடையன்னாள்
பூணும் புனைந்திலள் ஓதியும்பேணிலள்
போங்தெழுதாள்
மாணும் விழிக்குமை யென்னேநின்
நீர்மை வகுப்பரிதே.

(தலைவன் செவ்வியெளிமை செப்பல்) தலைவன் நின்று லெய்தல் எளிதென்று கூறல்,

(44) கமுகும் கரும்புமொன் ருய்வளர் செ
ந்நெற் கதிர்வயலில்
குமுதங் கமழ் கொங்கு நாட்டுக்கு
பேரன் குடைமன்னர்சூழ்
சமுகத்துரை யெங்கள் சண்முகவே
லெனுந் தாமன்வெற்பாய்
அமுதமென் றுன்னை அவாவும்என்
சீர்சொலி னவ்வன்னமே.

(என்னை மறைப்பின் எளிதென நகுதல்) தலைவியை-என்னை மறைப்பின் நீர் எண்ணியகாரியம் எழிதில் முடியுமெனத் தோழி தலைவனை நகையாடிக்கூறல்.

(45) பனையறி யாவன்றி லின்றெனப் ரேனும்
பாமர்பதம்
தனைவந் தனைசெயும் சண்முகவே
லரிச்சந்திரன் வெற்பா
எனையறி யாதுசென் றுன்செய
லோதி னிதயமகிழ்ந்
துனைநன் கவாவுவள் நீரிருவீருமிங்
கோருயிரே.

(அங்நகை பொருதவன் புலம்பல்)

(46) வில்லாற் பகைவென்ற காங்கேயநாட்டுமிகு
புகழ்சேர்
வல்லான் தனஞ்சயன் சண்முக
வேலெனும் வாகன்வெற்பில்
கல்லா லெறிபட்ட புண்மேல் தடிபட்ட
கட்டமொப்ப
நல்லா யுறுதிசொற்ருய் நகைத்தாயெ
வன் நான்செய்வதே.

(பாங்கி தலைவனைத் தேற்றல்)

(47) ஒருடற் கைந்தலை போற்சகி மார்ப
ல ருண்டவர்க்குள்
நேர்நடுப் போலு மெனைத்துணை
கொண்டனை நீகவலேல்
சீருயர் செந்தமிழ்ச் சண்முகவேலெ
னும் சிங்கம் வெற்பிற்
காருயரோதி அருளே மிகுந்தவள்
காணண்ணலே.

(பாங்கி கையுறையேற்றல்)

(48) ஒள்ளிய ராயினுந் தெள்ளிய ரா
யினும் ஊழ்நுழையும்
மெள்ள வெனச்சொலு மெய்தெரிந்தேன்
சந்தமென் பொழில்வாய்
உள்ள இளம்பைந் தழையித னூற்
புக ழோங்குகொடை
வள்ள லெனும் சண்முகவேல்வித்
தாரன் வரையிடத்தே.

(கிழவோன் ஆற்றல்)

(49) வாவும் புரவி நகுலன் குமார
சுவாமிசுதன்
காவும் நிகர்கரன் சண்முகவேலெனு
ம் கன்னன் வெற்பில்
பாவையன் னுள்முகம் காட்டுமென்
பென்னும் பதுமச்செந்தேன்
மேவுமென் சிந்தையெ னும்வண்
டுண்டானந்தா மேவியதே!

(குறைநயப்பித்தலும் மறுத்தலும்) இறைவன் றனக்கு குறைநேர்பாங்கி இறைவிக்கவன் குறையுணர்த்தலுமிறைவி அறியாள்போன்று குறியாள் கூறலும் பாங்கியிறையோர்க் கண்டமைபகர்தலும், பாங்கியைத் தலைவிமறைத்தலும் பாங்கி என்னைமறைத்ததென்னெனத் தழாஅலும் கையுறை புகழ்வு மென்றிவ்விரு மூன்றும் மெலிதாகச்சொல்லிக் குறைநயப்பித் தற்கும் வலிதாகச் சொல்லி மறுத்தற்குமுரிய

அவற்றுள்

(இறைவிக்கவன் குறையுணர்த்தல்) தோழி தலைவிக்கு தலைவன் குறைகூறுதல்.

(50) வந்தா ரொருவர்நம் மாட்டக லாரு
ரை வாக்கொன்றிலார்
தந்தார் தழையுள்ள தெல்லா மெனு
ற்செயத் தக்கதென்னோ
கொந்தார் குழலணங் கேகமழ்
கந்தங் குலாங்களப
சந்தார் புயன்சண் முகவேல்வித்
தாரன் தடங்கிரிக்கே.

(இறைவி அறியாள்போன்று குறியாள் கூறல்) தலைவி தோழிகூறிய தலைமகனை அரியாள்போல அவன் குறையை ஏற்றுக்கொள்ளாது வேறொன்று கூறல்.

(51) கடுவ னுதவுங் கனியை மறுத்துக்
கனன்றுமந்தி
நெடுமாத் தேறுதல் பார்பசுங்
கிள்ளை நிகர் மொழியாய்
நடுநிலை சற்றுந் தவிராது தெவ்வர்
நடுங்கவம்பு
தொடுசிலை யான்சண் முகவேல்வ
ரோதயன் தொல்வரைக்கே.

(பாங்கி தலைமகனைக் கண்டமை பகர்தல்)

(52) மின்னார் மதன்சண் முகவேல்
உல்லாசன் வியன்சிலையே
றன்னார் பிடியொன்று கண்டாய்கொ
லென்று விலம்பினராய்
தென்னார் பசும்பொழிற் பாங்கர்வந்
தாருன் திருவிழைந்தார்
பொன்னார் கமலத் திரண்டரும்
பேந்திய பூங்கொடியே.

(பாங்கியைத் தலைவி மறைத்தல்)

(53) அன்பா லெதுசொல்லி னும்நவையொ
ன்றின் றயலொருவர்
முன்பால் தழையொடு வாடிச்சென்
ருாம் முறைகண்டுளேன்
என்பாற் பிறிதொன் றிலையவை
பாடற் கினிதுவந்து
முன்பாற் கனிதரும் சண்முகவேல்
வரை மொய்குழலே.

(பாங்கி என்னை மறைப்பதென்னெனத் தழாஅல்)

(54) கண்ணிற் கருமணி யென்றே நினைந்த
னன் கன்னி நின்னை
எண்ணிப் புகன்ற தறிந்திலை
வஞ்சித் தெனைமறைத்தாய்
பெண்ணிற் சிறந்த பெடையன்ன
மேயுயர் பெட்பினொடு
நண்ணித் திருவளர் சண்முகவேல் வல்
லவன் கிரிக்கே.

(பாங்கி கையுறை புகழ்தல்)

(55) பொன்னு லியன்ற தகடெனிற் கந்தம்
பொருந்தப் பெரு
தென்னு லுயர்விட் பசுந்தழை
வாட்டஞ் சிறிதுற்றிடா
நின்னு லிறைவர் தருந்தழை நீர்மை
நிகழ்த்தரிதே
என்னுற் புகழ்சண் முகவேல்வித்
தாரன் எழில்வரைக்கே.

(குறை நயப்பித்தலும் நயத்தலும்) தோழிகிழவோன்றுயர் நிலை கிளத்தலும் மறுத்தற்கருமை மாட்டலுந்தலைவன் குறிப்பு வேருக நெறிப்படக் கூறலுந் தலைவிமுனிதலும் தலைவி பாங்கி தன்னை முனிதலும் தன் கைக்கையுறை எற்றலு மெனமுறை சாற்றியவாறும் வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தற்கும் - மெலிதாகச்சொல்லி மேவற்முகுறிய,

அவற்றுள்

(தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்)

(56) மயிலும் பெடையும் பிரியாது சந்த
மாநிழலில்
பயிலும் செயலையும் பார்ப்பர் என்
தன்னையும் பார்ப்பர்கருங்
குயிலுங் கிளியும் நிகர்மொழியாய்
பணக் கூட்டணைமேல்
துயிலும் பானருட் சண்முகவேல்வி
துான் வெற்பரே.

(தோழி தலைவனை மறுத்தற்கு அருமைமாட்டல்) மறுத்த ற்கு அருமைமாட்டல் மறுத்தற்கு அருமைபொருத்திக்கூறல்.

(57) தழையேந்தி யன்பர் வருந்தொறும்
மெய்யெனச் சாற்றியபொய்
மழையேந் தியகுழ லாய்வரம்
பில்லை மறைவுன்னினேன்
இழையேந் தியவரை யேநிகர்
சொற்கத் திரதி மகிழ்
கழையேந் தியசிலைச் சண்முகவே
லங்கசன் வரைக்கே.

(தலைவன் குறிப்பு வேறாகநெறிப்படக் கூறல்) தோழி தலைவனுடைய குறிப்பு வேறாக இருந்ததென்று கூறல்.

(58) கங்கையுங் காளியுந் தந்தமைந்தற்கு
கருத்தயராச்
சங்கையு மின்றிப் புரிகுவர்போலும்
தடங்கணல்லாய்
கொங்கையுஞ் செல்வ புரியையுங்
காக்குங் குபேரன்வண்மைச்
செங்கையும் சார்சண் முகவேல்உ
தரான் சிலையண்ணலே.

கங்கைமைந்தன் - பனைக்கொடிகொண்ட வீடுமன்; காளி மைந்தன் - பரிமளகந்திதந்த சடைமுடித்த வியாசர்

(தோழி தலைவியை முனிதல்)

(59) திறங்கூற லின்றியலர் மறைக்காதுண்மை
செப்பு குற்றம்
மறங்கூற லின்றி மகிழ்ந்தருள்
சண்முக வேல்வரதன்
அறங்கூறல் சற்றுமி லாதவர்ப்
பாடி அலைபுலவர்
புறங்கூறல் செய்யவொட் டாதருள்
வோன்வரைப் பூங்கொடியே.

(தலைவி பாங்கியை முனிதல்)

(60) யாரே குறைபுகல் வாரெனைக் கூடிய
அன்பர்செயல்
நேரே புகன்று குறையிரந் தாள்குறை
நீர்மையென்னே
பாரே புகழ்தரு சண்முக வேல்கிரு
பன் பொருப்பில்
சீரே பெருமென் குறையில்லை யாகவுஞ்
சேர்ந்ததுவே.

(தலைவி கையுறை யேற்றல்)

(61) ஒன்றிற் குணமிரண் டுற்றல்கண்
டேன்தழை ஒன்றகற்றில்
மன்றில் பெரிதலர் காட்டும்கொண்
டாலுண்மை வாய்க்குமென்னே
குன்றிற் சிறந்த புயத்தாற்கு மேற்
சிந்தை கூர்ந்தனன்செய்
நன்றிற் புகழ்பெறு சண்முகவேல்
மத னன்கிரிக்கே.

(கூட்டல் கூடல் ஆயங் கூட்டல் வேட்டல்)

இறைவிகையுறை யேற்றமை பாங்கியிறைவற் குணர்த்த லும் குறியிடங்கூறலும் குறியிடத் திறைவியைக் கொண்டுசேர லும் குறியிடத்துய்த்து நீங்கலுமிறையோன் இடத்தெதிர்ப் படு தலுமியைதலும் புகழ்தலும் விடுத்தலும் பாங்கி மெல்லியற் சார்ந்து கையுறை காட்டலுமையுறை கண்ணியைப் பாங்கிற் கூட்டலு நீங்கித்தலைவற் கோம்படை சாற்றலு முலகியன் மேம் படவிருந்து விலக்கலும் பெருந்தகை விருந்திறை விரும்பலு மெனமுறை தெரிந்தபன் மூன்றுங் - கூட்டன் முதலா வேட்ட லீருப் பாங்கிக்கு வகுத்த நான்கிற்குமுறிய

அவற்றுள்

(இறைவி கையுறையேற்றமை பாங்கியிறைவற்குணர்த்தல்)

(62) பண்டே யிருந்த குணங் கண்டிலேன்
பொலம்பாவை நினைக்
கண்டே மகிழ்ந்தனள் போற்றழைக்
கொண்டு களிப்புற்றனள்
நண்டே நுழையளை தேனேபெருக
நளினமலர்
விண்டே கமழ்செய்ச் செல்வாபுரிச்
சண்முகவேல் வெற்பனே.

(பாங்கி தலைவற்கு குறியிடங்கூறல்) குறியிடம் - தலைவியை கூடக்குறித்த இடம்.

(65) ஆரங் கமழ்புயன் சண்முகவேலெ
ங்களாதிபதி
வீரம் பெறுபன்றி வெற்பண்ணலே
வெயில் வேட்கைதரும்
ஈரம் பெறுசந்தச் சோலைப் பளிக்க
றை யீரருவி
ஓரம் புனைசெம் மணியரங்கியா
ங்க ளுறையிடமே.

(குறியிடத் திறைவியைக் கொண்டு சேறல்) பாங்கி தலைவியைக்குறியிடத்துக்கு அழைத்துச் செல்லல்.

(64) முன்னும் புரிவண்ட லாட்டயர்ந்தோ
மம் முறைமறந்தால்
என்னும் அருவியிற் றேய்ந்துமலர்
கொய் தெழில் முத்தங்குற்
றென்னர் பணியும் பதன்சண்முகவே
லுதாரன் வெற்பில்
பொன்னர் மலரணங்கே விளையாடுதும்
போதுகவே.

(குறியிடத்துய்த்து நீங்கல்) பாங்கி தலைவியைக் குறியிடத்துவிட்டு வியாசமாகப் பிரிதல்.

(65) மானும் மடங்கலும் நோக்கிடைக் கொப்பன
மாற் கிளையாள்
தானுமி யக்கினள் நின்னீர்மையாலிவ
ண்சார் முகிழாய்
நானும் மலர்கொய் தருவிக்கட்போதுவன்
நன்னிதியும்
தேனும் நிகர்சண்முகவே லொய்யாரன்
சிலம்பன்னமே.

(இறையோன் இடத்தெதிர்ப்படுதல்) தலைவன் குறியிடத்துச்சென்று தலைவியைக் கூடுதல்.

(66) வறுமைப் பிணிக்கு மருந்தெனக் கற்பகம்
வாய்ந்ததென
உறுமைக் குழற் களிவாயணங்கே யெ
திர்ந்துற்றனை நீ
மறுமைக்கு நின்னைமறக் கின்றிலேன்
சொலும் வாய்மைக்கும் கூர்
பொறுமை க்குமற்புதன் சண்முகவே
லுயர் பூஞ்சிலைக்கே.

(புணர்ச்சியின் மகிழ்தல்) தலைவன் தலைவியைப்புணர்ந்து தன்னுட்கூறல்.

(67) போரால் விளங்கிய சண்முகவேலு
கெம் பீரன்வெற்பில்
ஓரால ங்காட்டரு கோங்கியவஞ்
சிக்கணுற்ற விருல்
சீரால மைந்தசெழுந் தேனையொப்பச்
செகத்திலினி
யாரால மைக்கப் பெறுவேன் மின்னுளிவட்
கார் நிகரே.

(புகழ்தல்) தலைமகன் தலைவியை வெளிப்படப்புகழ்தல்.

(68) நயங்கொண்ட வாசகன் சண்முகவே
ல்வர ராசன்வெற்பில்
வயங்கொண்ட வேல்விழி யாய்நின்
குழற்கண்டு வானமுகில்
பயங்கொண்டு வாய்விட் டலறியெத்தி
க்கும் பனிமலையும்
கயங்கொண்ட வேழுகட லும்சென்றோ
டிக்கறுத்ததுவே.

(69) யோகமி கும்புகழ்ச் சண்முகவேலெனும்
யூகிவெற்பாய்
வாகு முழவுக்கிசைந்த பொற்றுளம்
வழங்குநின்பால்
பாகவதா மிதங்கண்டுங் கீதப்பயனு
ங் கண்டும்
ஆகம்புளகம் தாமகிழ்ந் தேனெனக்
கார் நிகரே.

(பாகவதர்) அமிதம்-அபாரவித்வம்; கீதம்-இசை; (பாக) அதரம்-இதழ்; இதம்-இனிமை.

(ஆயத்துய்த்தல்) தலைமகளைத் தலைமகன் ஆயத்துச்செல்ல விடுத்தல்.

(70) தனியே பிரிந்தகுயில் குயிற்கூட்டத்தைச்
சார்வதெனக்
கனியே பிரிந்த மகளிர் குழாத்தைக்
கடிதடைதி
பனியே நிறைமலைவல்லி வல்லானருட்
பாப்பதிகத்
தொனியே செயுங்கொண்டல் சண்முக
வேலுயர் தொல்வரைக்கே.

(பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறைகாட்டல்) தலைமகன் நீங்கியபின் தோழி தலைவியை வந்து கூடல்.

(71) என்மேனி போலுமிளமாந் தளிரும்
எனதுயிராம்
நின்மேனி போலுநறுஞ் சண்பகமும்
நிறைகருங்கொண்
டன்மேனி யானிகர் நீலமும் காணுதி
யான் கொணர்ந்தேன்
பொன்மேனி வேளெங்கள் சண்முக
வேல்வள்ளல் பூஞ்சிலைக்கே.

(தலைவியைப் பாங்கிற் கூட்டல்) தோழி தலைவியை ஆயத்தார் விளையாடுமிடத்திற் சேர்த்தல்.

(72) முறுவற்குத் தோற்றுக் கண்ணீர்விட்
டு வாய்விண்டமுல்லையெலாம்
உறுவற் பெருக்கத்தடைந் தனபோல
வை யுன்குழற்கே
நிறுவற் கணிந்தனன் மின்னார்
குழாங்கண்டு நேர்புகுவோம்
தொறுவர்க் கருள்சண்முகவேல் வரோதய
ன் தொல்வரைக்கே.

(ஓம்படை சாற்றல்) பாங்கி தலைமகளை ஆயத்துச்சேர்த்து மீண்டுவந்து தலைவனை எதிர்ப்பட்டு நின்வழிபாட்டுக்கியைந்து நின் வரைப்பட்ட என் தலைவியை நீ பாதுகாத்துக்கொள் ளென்று கூறல்.

(73) குலமுணரேன் நின்குணமுணரேன் வள
ங் கொண்டவுன்றன்
தலமுணரேன் நினக்காப் பலவாச்சொ
லத்தக்க செயற்
பலமுணராது மறவே லிவளையன்
பாப்புரப்பாய்
நலமுணர்வோ னெங்கள் சண்முகவேல்
வர தன்வெற்பனே.

(உலகியல் மேம்பட விருந்து விலக்கல்) உலகியலால் விருந்து கூறுவாள்போன்று தலைமகனைப் பகல்வரவு விலக்கல்.

(74) தேனுங் கிழங்கும் தினைமாவும் புள்
ளும் செரிமுயல்மான்
ஊனும் பெரிதிங் கலதுமற்றொன்றி
லை ஊர்புகுதி
வானும் புவியுமளந் தானருள்பெறு
வள்ளலெனை
நானும் புகழ்சண் முகவேல் வல்லான்
வள நாட்டண்ணலே.

(விருந்திறை விரும்பல்) தலைவன் விருந்தாகத்தங்குதலை விரும்பல்.

(75) தேவர்க்கும் தெண்கடல் சூழ்புவி
யோர்க்கும் தெருண்டமற்றை
யாவர்க்கும் ஆங்கவை யாரமுதாம்
நின்னருளிது பல்
சீவர்க்கு மோர்துணையாய முதாய்த்தளி
சேர்ந்துவளர்
மூவர்க்கு மன்புசெய் சண்முகவேல்
வெற்பின் மொய்குழலே.

—வாழி—

பூவையும் பல்லுயிர் யாவையுங்கா
க்கும் புகழ்க்குமரர்
சேவையும் சண்முக வேலெனும்
பூமனும் சேர்கிளைகள்
யாவையும் மக்கட் பெரும்பேறும்
வாழ்க்கையும் ஆங்கவன்றன்
கோவையும் செல்வத் திருவூரும்
வாழி குவலயத்தே.

மடல்வகை.

சிலப்பதிகாரம் (ஓர் நூல்) (சிலம்பு + அதிகாரம்) —மலை நிகர்த்த கொங்கை அதிகரிப்பு.

வளையாவதி (ஓர் நூல்) திருஉந்தியார் ஓர் நூல்—வளைந்து தங்கிய அழகிய தொப்புள்.

திருக்கடையாப்பு (ஓர் நூல்) —திருக்கு + அடை + யாப்பு —கண்ணில் பொருந்திய கட்டு.

திருவாசகம் (ஓர் நூல்)—சிறந்த வசனம்.

திருவாலங்காடு (ஓர் தலம்)—ஆலிலை ஒத்தவயிறு.

திருமுல்லைவாயில் (ஓர் தலம்) —முல்லை மலரையொத்த பல்மருவும் வாயிடம்.

காஞ்சித்தலம் — (ஓர் தலம்) — காஞ்சியணியும் இடம் (இடை)

கருக்கை — கரிதலை, பனைமட்டையலகினை.

நீலப்பெருமடற்கிள்ளை —பனைமடல் குதிரை, பச்சை நிறங்கொண்ட பலமான கிளி. அளிக்குணம் — வண்டு நாண், அன்பான குணம்.

நேயம்—சிநேகம்; சித்தார்த்தம் — மனச்செயல்; நேர் இரசம் — சுவையடை என்னும் ஏவல்; தாளி—பனை; தந்து—தந்திரம்.

நேயம்—எண்ணெய்; சித்தார்த்தம்—கடுகு; இரசம்—மிளகு நீர்; தாளிதம்—தாளிப்பு.

கன்னி—இளமை; வாழை—வாழைமரம்; படப்பாம்பு—படங்கொண்ட பாம்பு; அடல்—பலம்; தேள்—விடஜெந்து.

கன்னி—பெண்; வாழை — வாழைபோன்ற தொடை; பாம்பு—பாம்புபோன்ற அல்குல்; மடல்—மட்டை; தேள்—பனை.

மாசோதிடம்—பெரியஜோதிட நூல்; பலன்—திசா, புத்தி, சித்ரபலன்; பெண்ணை—அநுடநாள்; கன்னி—கன்னிராசி; மாசு ஓதிட—குற்றங்கூற; பலன்—திடம்; பெண்ணை—பனை; கன்னி—பெண்.

இளம்பிடி—பெண்யானை; வியபடை அங்குசம்—உயர்ந்த தோட்டியாயுதம்; புன்மடன்மா—சிறிய மட்டிக்குதிரை.

இளம்பிடி—பெட்டை யானைபோன்ற தலைவி; வியப்பு அடை அங்குசம்—மகிழ்ச்சிதரும் அழகியதனம்; புல்—பனை; மடல்—கருக்கி; மா—குதிரை.

போந்துவந்து—வந்து; மித்திரன் — சிநேகன்; ஆள்— காத்தல்செய்; தேள்—விடஜெந்து; போந்து—பனை; உவந்து—சந்தோஷித்து; மித்திரனுள் — பனையாகிய அனுடம். (மித்திர நாளென்று வேண்டியது. அது தேள் எனப்பெயர்கொண்டது அறிகிலாய் (தேள்—பனை) அதற்கு உரியான். அதுபல். உரியான்— உற்றவன் அதாவது புல்லன் (புல்—பனை)

ஏடகம்—திருவேடகம்; கூடல்—மதுரை; கயற்கண்ணி— மீனுக்ஷியம்மை.

ஏடகம்—பனை; கூடல்—கூடுதல்; கயற்கண்ணி—கயல் மீன்போலும் கண்ணையுடைய தலைவி.

முடி மகுடம்; அரசு—ராஜரீகம்; தாலம்—பூமி; நல்லார்— நல்லவர்.

முடி—மகுடத்தையொத்த தனம்; அரசு—அரசிலையொத்த அல்குல்; தாலம்—பனைமரம்; நல்லார்—பெண்கள்.

தனக்குடம்-கன்றோடுகூடிய பசு (தனம்-கன்று; குடம்- பசு) புல்வனம்—புல்உணவுமிகுதி; மடு—சுரபி; பயன்—பால்.

தனக்குடம்—கொங்கைக்கும்பம்; புல்வளம்—கூடும்நலன் அடுத்தால்—சார்ந்தால்; பயன்— பிரயோஜனம்.

—0—

Printed at
THE
SATHANANDHA
POWER
PRESS,
POLLACHI

1918
1890